விலை முக்காலணா — இலங்கை 8 சதம்

சந்தா விவரம்

1 ஆண்டு ரூ. 18-0-0
6 திங்கள் ரூ. 9-0-0
3 திங்கள் ரூ. 4-8-0

தனிப்பிரதி முக்காலணா. மூன்று மாதங்களுக்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

மாலைமணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

ஆசிரியர் : மு. கருணாநிதி

Most Popular in the South

விளம்பர விகிதம்

அங்குலம் பத்தி ஒன்று ரூ. 5-0-0 நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு.

மானேஜர்
'மாலை மணி"

Phone: No 4502

மாலை 2 | சென்னை : 16—5—51 புதன்கிழமை ★ வெளியூர் : 17—5—51 வியாழக்கிழமை | மணி 159

மனித சமுதாயம் கலங்கிய குட்டை

நூல் கோட்டாவில் குறைப்பு

வாக்குறுதி காற்றில் விடப்பட்டது

சென்னை, மே. 16—

சென்னை ராஜ்யத்துக்கு மாமூலாக ஒதுக்கப்பட்டுள்ள 22,500 பேல் நூல் கோட்டாவில் மார்ச் மாதத்தில் 19,375 பேல் நூல் கோட்டாதான் கிடைத்ததென்பதை நேற்று வெளியான அரசாங்க அறிக்கை கூறுகிறது.

அதிகம் பேர் செல்லக்கூடிய பஸ்

சென்னை, மே 15—

45 பேர்கள் செல்லக்கூடிய டீசல் பஸ்ஸை இம்மாதக் கடைசியில், கூட்டம் அதிகமாக இருக்கும் நேரங்களில் சென்னை நகரில் விடப்படுமாம்.

....

கல்யாணசுந்தரம் ஜாமீனில் விடுதலை

சென்னை, மே 15—

இன்று, தெ.இ. ர. தொ. சங்கத் தலைவர் எம். கல்யாணசுந்தரம் ரூ. 2000 ரொக்க ஜாமீனிலும், ரூ. 2000 பத்திரங்கள் பெற்றுக் கொண்டும் விடுதலை செய்யப்பட்டார்.

....

ஜவுளிக் கடைக்குத் தீ

கள்ளச்சந்தை வாணிகத்தின் பலன்

கடப்பை, மே 16—

இவ்வூரிலுள்ள ஒரு கடையில் துணி விற்பனை செய்யப்படுகிறதென அறிந்து மக்கள் ஏராளமாகக் கூடினர். இதைக் கண்ட கடைக்காரர் விற்பனையை நிறுத்திக் கடையை மூடினர். இந்தக் கடைக்குக் கிடைக்கும் கோட்டாவில் பெரும் பகுதி கள்ளச் சந்தையில் விற்கப்படுவது வழக்கமாம். எனவே ஆத்திரமடைந்த மக்கள் கடைக்குத் தீ வைத்தனர்.

தீய சக்திகளுக்குக் காரணம் மன்னர்களும் பாதிரிகளுமே

..............(0)..............

பாபம்புண்ணியமென்றுகூறி பாமரர்கள் ஏமாற்றப்படுகின்றனர்

—————(:0:)—————

ஆளும் கட்சியின் அக்ரமம் அளவுக்கு மிஞ்சிவிட்டது

..............(-)..............

மதுரையில் தோழர் மனோகரன் முழக்கம்

மதுரை, மே 15—

மதுரை தி. மு. இளைஞர் கழக ஆண்டு விழா 13-5-51ல் நடைபெற்ற ஞான்று தோழர் மனோகரன் அவர்கள் ஆற்றிய சொற்பெருக்கின் சுருக்கம் வருமாறு.

தோழர்களே!

நான் இங்கு பேசுவது இது இரண்டாவது தடவை. இன்று உங்கள் முன்னால் பேச, இச்சந்தர்ப்பத்தைத் தந்த உங்களுக்கு என் நன்றி இன்றையதினம் நாம் வளர்ந்துள்ளோம். அராஜக காலந்தொட்டு, ஜனநாயக காலம் வரை வளர்ந்தோம். இப்படி வளர்ந்த ஒரு சமுதாயத்தின் நிலை பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள ஆசைப்படுவது சகஜம்தான். மனிதன் ஒருவரை ஒருவர் அறியாத காலத்தில் அவனுக்கென ஓர் அமைப்புஇருந்ததில்லை. பின்னர்தான் இந்த அமைப்பு வளர்ச்சியின் காரணமாகத் தோன்றியது.

தனக்கென ஒரு சமுதாயம் தேவை, அமைப்பு தேவை என்று கருதியபின்பு மன்னர்களும் பாதிரிகளும் நாட்டிலே தோன்றினர். இப்படித் தோன்றிய இப்பாதிரிகள்தங்களை ஆண்டவன் அவதாரமென்றும், தன்னைத் தவிர ஆண்டவனுடன் பேச எவரும் அருகதையற்றவர்கள் என்றும் கூறத் தலைப்பட்டார்கள். இந்த நேரத்தில்தான் தீய சக்திகள் நாட்டிலே தோன்றலாயின, இத்தீய சக்திகளை முறியடித்து, சமுதாயத்திலே முன்னேற வேண்டுமென்றுதான் அவ்வப்போது சிந்தனைச் சிற்பிகள் தோன்றினர். சாக்ரடீஸ், இங்கர்சால் போன்ற சிற்பிகள் இக்கருத்தை நாட்டிலே பரப்பியபோது இவர்களுக்கு தரப்பட்டது விஷக்கோப்பைத்தா , இருந்தாலும் மனித சமுதாயம் முன்னேறியது. மதவாதிகளும், பாதிரிகளும் தங்களுக்கு ஆபத்து என்று கண்டவுடன், நரகத்தையும், சொர்க்கத்தையும், நெருப்பாற்றையும், அதன் மீதுள்ள மயிர்ப்பாலத்தையும் காட்டி மக்களைப் பணிய வைத்தனர், வைதீகர்களின் பயமுறுத்தல், மன்னனின் சட்டம், இவை எல்லாம் மக்களைப் பயமுறுத்தியபோதிலும், இன்று மனித சமுதாயம் டெமாக்ரசி—தீவிர ஜனநாயம் வரை வளர்ச்சியடைந்தது. மனித சமு

(3-ம் பக்கம் பார்க்க)

மக்களை மதிக்காத மந்திரிகளை வெளியேற்ற வேண்டும்

..............(0)..............

நோயாளரை குணப்படுத்தாத டாக்டரை விரும்புவோமா?

..............(0)..............

ஆசார்ய கிருபலானி கருத்து

திண்டுக்கல், மே 16—

காந்தி கிராம 5-வது ஆண்டு தின விழா சம்பந்தமாக இங்கு நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்தில் ஆசார்ய கிருபலானி பேசிய தன் சுருக்கம் வருமாறு:

"மக்களின் அடிப்படை தேவைகள் சம்பந்தப்பட்டவரை சுதந்தரம் கிடைத்த பிறகு இந்தியா ஒருபடி கூட முன்னேறவேயில்லை உலகின் பிறநாடுகளிடம் உணவுக்கும், துணிக்கும் பிச்சை எடுக்கும் நிலை நமக்கு ஏற்பட்டுவிட்டது.

நாட்டின் தலைவர்கள் மக்களே தான்; சில மந்திரிகளும் அதிகாரிகளும் அல்லர்; இதையுணர்ந்து மக்கள் விழித்தெழுந்து ஒற்றுமையுடன் போராட முன்வராவிடில் நாட்டின் நிலை இன்னும் நெருக்கடிக்குள்ளாகிவிடும். அதிகாரத்தில் காங்கிரஸ் மந்திரிகள் இருப்பதால் பல தவறான செயல்கள் நடைபெற்று வருகின்றன. இவை குறித்து மக்கள் மௌனம் சாதித்தால் பின் துன்பப்படுபவர்கள் மக்களேயாவர்.

அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டியது மக்கள் பொறுப்பு மக்

4-ம் பக்கம் பார்க்க

மாலை மணி

சென்னை 16—5—51 புதன்கிழமை

நமது உரிமை

"பேனாவை உடைப்போம்... வாயை அடைப்போம்...என்ன தைரியம் உனக்கு! எங்களைப் பற்றிப் பேச நீ யார்? எங்கள் நடவடிக்கைகள் குறித்து எழுத நீ யார்? நாங்கள் சுதந்திரம் வாங்கியவர்கள். நாட்டையாளுகின்றவர்கள். நாங்கள் வைத்தது சட்டம், விடுதலை வாங்கித் தந்த எங்களுககு முன், விவேகசிந்தாமணி...நீ யார்? நாங்கள் விடுவித்தோம் மக்களை! நாங்கள் வேதனைப்படுத்துவோம் அவர்களை! விழியிலே நீர் பெருக்கி மொழியிலே கனல் பெருக்கி விசாரக் குரல எழுப்புகிறாயே; உனக்கென்ன இருக்கிறது உரிமை? நாங்கள் பாரததேவியின் விலங்கொடித்தவர்கள். பட்டினிபோடுவோம மக்களை. பசி பசியெனக் கேட்டிடும் கூக்குரல் எங்களுக்குக் கோகிலகானமாக இருக்கும். அதற்காக நீ ஏன் ஒப்பாரி வைக்கிறாய் வெள்ளைக்காரனை வெளியேற்றிய வீராதி வீரர்களப்பா நாங்கள்...எங்கள் ஆட்சியிலே நீ பேசக்கூடாது; நெருப்பு மழை பொழியும்; நீ கேட்க உரிமை கிடையாது. எரிமலைகளை உண்டாக்குவோம் கண்டித்து எழுதக் கூடாது நீ! சர்க்காருக்குச்சாமரம் வீசலாம்...சந்தோஷப்படுவோம், சந்தணம் பூசலாம் தட்டிக்கொடுப்போம். மயக்கம் தெளிய மருந்து கொடுத்தால் மண்டையிலடிப்போம். நீ யார் எங்களுக்கு மருந்து கொடுக்க! பார்த்தாயா போலீஸ் படையை! பார்த்தாயா சிறைச்சாலையை! சிந்திததாயா தூக்குமேடையை! கண்டிருக்கிறாயா கண்ணீர்ப்புகையை! ஜாக்ரதை! எங்கள் விஷயத்தில் தலையிடாதே! நீ பேசாதே! நீ எழுதாதே! நல்லவைகளைக் கூட நீ சொல்லலாம்...நாங்கள் அவற்றை நஞ்சாகத்தான் மதிப்போம்...... உஷாராயிரு! உயிரை விடாதே!"

இப்படிப்பட்ட எச்சரிக்கைகள்—மிரட்டல்கள் அடக்கு முறைகள்—அதிகார அப்புகள் இதே தோரணையில் இல்லாவிட்டாலும், இந்தக் கருத்தை எதிரொலிக்கும் விதத்திலே எதிர்க் கட்சிகளின் மேல் ஏவப்படுகின்றன நமது சர்க்காரில்! குன்றத்தூர் சம்பவத்திலிருந்து கூச்பீஹார் கொடுமை வரையில் நாட்டிலே பொழுதுபோக்கும் கதைகளாக ஆகிவிட்டன.

அரசாங்க சிறைச்சாலைகளுக்கு அஜீர்ணம் ஏற்படுகிற அளவுக்கு அரசியல் கைதிகள் நிரப்பப்பட்டு விட்டனா. அங்கே அவர்களுக்கு ஏற்படுகிற இன்னல்களோ நினைத்தாலே நெஞ்சு எரிகிறது, அவ்வளவு பயங்கரமானவை. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்திய போராட்டங்களில் சிறைப்பட்ட வீரர்கள் அந்தக் கொடுமைகளை சுவைத்துவிட்டுத்தான் வந்திருக்கிறார்கள் மொட்டையடிப்பது—பட்டினி போடுவது-வேலைகள் தந்து வேதனைப்படுத்துவது—இப்படி கொடுமைக் கூர்வேல் பொழிந்திருக்கிறார்கள் சிறைச்சாலைகளிலே! திராவிட கழகத்தார் நடத்திய மறியலிலே சிறைப்பட்டதோழர்கள் பட்டிருக்கும் அவதியும் கொஞ்சமல்ல.கம்யூனிஸ்ட் கட்சிக் கைதிகளுக்கும் காணபோர் கண்ணீர் விடும் நிலையிலேயே உபசாரம் நடந்திருக்கிறது, சிறைக் கோட்டத்திலே! இன்றைக்கு அவர்கள் வசம் இருக்கிற சிறைச்சாலைகள் முன்பொரு நாள் அவர்கள் வாழ்ந்த இடங்கள் என்பதை உண்மையாகவே மறந்துவிட்டார்கள். "மோர் தரப்படவில்லை" இதற்கொரு 'போர்' நடக்கும் அப்போது!

"சாப்பாட்டிலே உப்பில்லை" இதற்கொரு சத்யாக்ரகம் நடத்தியிருக்கிறார்கள் இந்த சண்டமாருதர்கள்!

"கு ப்பதற்குத் தண்ணீர் போதவில்லை" இதற்கொரு சத்யப் போராட்டம தவக்கியிருக்கிறார்கள் இன்றைக்குச்சர்க்காராய் மாறிவிட்ட சன்மார்க்க சீலர்கள்!

மோருக்கு, உப்புக்கு, தண்ணீருக்குப் போராடியவர்கள் இன்று புலிகளாக மாறி எதிர்க்கட்சிகளை எலிகளாக நினைத்து நடக்கிறார்களே; ஏன் என்றுதான் நமக்குத் தெரியவில்லை. 'ஏன்' என்றுகேட்டால் எடுக்கிறாகள் அடக்கு முறைச் சட்டத்தை!

இது முறையா? தகுமா? தர்மந்தானா? என்று கண்ணீரிலே எழுதுகோலைத் தோய்த்து எழுதினால் "விடாதே பறிமுதல்!" என்று வரிந்து கட்டுகின்றனர்.

இந்தப் பயங்கரமான சூழ்நிலை எப்போது இருக்கிறது தெரியுமா தோழர்களே?

ஆரியமாயைக்கும், அறிவுபயக்கும நமது நூல்கள் பலவற்றிற்கும் அணைபோட்டது எப்போது தெரியுமா தோழர்களே?

நல்ல கருத்துள்ள—நாட்டுக்குப் புதையல் போன்ற—நமது நாடகங்களை நடிக்கக் கூடாதென்று தடை போட்டது எப்போது தெரியுமா தோழர்களே?

நாரணமங்கலத்தார்களை 144 போட்டுக் கடுங்காவல் தண்டனை கொடுத்தது எப்போது தெரியுமா தோழர்களே?

நண்பர் நடராசன் பேசப்போன குன்றத்தூரிலே கொடுமையை வாரியிறைத்து குண்டுகளை வீசி ரத்தக்களரியை உண்டு பண்ணியது எப்போது தெரியுமா தோழர்களே?

சேலத்திலே தோழர் சித்தையன் முன்னின்று நடத்திய நெசவாளர் கிளர்ச்சியை சாக்காக வைத்து அவாமீது ஜாமீன் வழககுத்தொடுத்தது எபபோது தெரியுமா தோழர்களே?

காங்கிரஸ் அஹிம்சை ஆட்சியில் என்று பதில் சொல்லுவீர்கள். இல்லை! இல்லை! அதுவல்ல நாம் குறிப்பிடுவது! எழுத்துரிமை பேச்சுரிமை கட்டுப்படுத்தப்படாமல் அரசியல் சட்டம் வகுக்கப்பட்டிருந்த நேரத்தில்தான் மேலே தீட்டிய தீமைகள் நர்த்தனம் புரிந்தன நாட்டிலே! இப்போது திருத்தப்படும் அரசியல் சட்டத்திலேஎழுத்துரிமை பேச்சுரிமையைக் கட்டுப்படுத்தும் திட்டம் வரப் போகிறது. "பொது அமைதி"க்கு உகந்தபடி எழுத்துரிமையைக் கட்டுப்படுத்தலாம் என்று திருத்தம் வரப் போகிறது. பொது அமைதி என்று பெயரை வைத்துக்கொண்டு போலிக் காரணங்களை உற்பத்தி செய்து அடக்குமுறைக்குச் சுதந்திரமளிக்கப் போகிறார்கள் என்றுதான் நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. எழுத்து, பேச்சு உரிமைகளுக்கு கட்டுப்பாடு இல்லாத பொழுதே இந்தத் தொல்லைகள் என்றால், கட்டுப்பாடு வந்து விட்டால் எல்லையிருக்குமா அடக்குமுறைக்கு! இப்போது பேசாதே என்கிறார்கள். இனிமேல் பேச நினைக்காதே என்பார்கள்.

இப்போது எழுதாதே என்கிறார்கள். இனிமேல் எண்ணாதே என்பார்கள். பலாத்கார பேச்சுக்கள்—பார்க்கக் கண் கூசும் ஆபாச எழுத்துக்கள் கண்டிக்கப்பட வேண்டியவைதான் ஆனல், அதற்காகப் பேச்சுரிமை எழுத்துரிமை மூச்சு விடக்கூடாது நாட்டிலே என்று நவில்வது முகல்தரமான ஜார் ஆட்சி!

திராவிட இயக்கத்துக்கு-முன்னேற்றக் கழக வீரர்களுக்கு பெரும் சோதனைக் காலங்கள் வரப்போகின்றன. நம் வளர்ச்சியைக் கண்டு நடுங்கியிருப்பவர்கள் 'ஒடுங்க மாட்டார்களா' இவர்கள் என்று ஓயாக்கவலை கொண்டிருப்பவர்கள், சென்னை அரசாங்கத்தார். வரப்போகும் அரசியல் சட்டத்திருத்தத்தை அமோகமாக வரவேற்பார்கள். நம பேச்சின் ஒவ்வொரு எழுத்தையும் கவனிப்பாகள். நம் எழுத்தின் ஒவ்வொரு வளைவையும் அளந்து பாாப்பார்கள்.

நம்மை எதிர்நோக்கியிருக்கும் திட்டங்கள் ஏராளம். தியாகத் தீயிலே குதிக்கவேண்டிய திட்டங்கள்-வரப்போகும் அறப்போர்கள் அதிகம் அதிகம் என்றுதான் இன்றைய சூழ்நிலை சுட்டிக்காட்டுகிறது. அந்தப் போராட்டக் காலங்களிலே புதுப்புது பாணங்கள் நம்மீது தொடுக்கப்படும்,

அதற்காக அமைக்கப்படும்அஸ்திவாரத்தில் ஒருபகுதிதான் இப்போது வருகிற அரசியல் சட்டத்திருத்தம். நாமோ, அஞ்சி அஞ்சிச் சாகும் கூட்டமல்ல! வெறும் வேட்டுக்கள் கிளப்புபவரல்ல! பணத்துக்கோ, பதவிக்கோ, விபீஷணர்களாகாத பரம்பரையினர்! ஒரு இலட்சியத்துக்காக களத்தில் இறங்கிவிட்டவர்கள் வாழ்வு வரினும், சாவு தழுவினும் வரவேற்போம் என்ற வைர நெஞ்சுடன் வாளேந்திவிட்டவர்கள். வருவது வரட்டும் என்ற உறுதியுடனே போர் நாளைஎதிர்பார்த்திருப்போம். எழுத்துரிமை, பேச்சுரிமை—எத்தனை உரிமைகள் தனித்தனியாகப் பறிக்கப்பட்டாலும் சரி; நாம் ஓரே ஒரு உரிமை—மொத்தமான உரிமை—முழு உரிமை-திராவிட தனி நாடு என்ற உரிமை—கிடைக்கும் வரையில் போராடுவோம்.

இந்தியாவின் சாகுபடி நிலை

81 கோடி 8 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யலாம்

ஆனல் நடப்பது ⅓ வேலையே

புதுடில்லி, மே 16—

இந்தியாவின் நிலப்பரப்பு 81 கோடியே 8 லட்சம் ஏக்கர் என்றும், இதில் 25 கோடியே 33 லட்சம் ஏக்கர் நிலத்தில்தான் சாகுபடி நடக்கிறதென்றும், 34 கோடி 75 லட்சம் ஏக்கர் நிலம் பயிரிடப்படாமல் கிடக்கின்றனவென்றும் இந்திய உணவமைச்சர் முன்ஷி தெரிவிக்கிறார்.

இந்தியாவுக்கு 30,000 மணங்கு உணவு கொடுத்துதவக் காஷ்மீர் முன் வந்திருக்கிறது.

படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள்கோவில்

சென்னை, மே 14—

பள்ளிக்கூடங்களின் கட்டடச் செலவைக் குறைத்து அதைப் பள்ளிக்கூடத்தின் வேறு முக்கிய செலவுகளுக்குப் பயன்படுத்துமாறு இந்திய அரசாங்கம் சென்னையரசாங்கத்துக்கு அறிவித்திருக்கிறது. பல்கலைக் கழகங்களுக்கும் இவ்வாறு அறிவிக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டப் பணமில்லாததால் அரசாங்கம் இவ்வாறு உத்தரவனுப்பியதாகப் பொருள்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஆனல் சென்னை அரசாங்கம், சட்டசபை அங்கத்தினர்கள் சட்டசபை கூடும் காலங்களில் தங்கியிருப்பதற்காக ரூ. 5,96,000 செலவில் ஒரு கட்டடம் கட்ட முடிவு செய்திருக்கிறது. இப்போது 85 பேர் தங்கக் கட்டடம் இருக்கிறதாம். இன்னும் 100 பேர் தங்குமாறு இப்புதிய கட்டடம் கட்டப்படுமாம் புதிய அசெம்பிளியில் மொத்தம் 375 அங்கத்தினரிருப்பர் அவர்கள் 185 பேர் தங்க இப்போது வசதி செய்யப்படுகிறதாம்.

கல்வி கற்பிக்கும் பள்ளி கட்டப் பணமில்லை. கூட்டம் நடைபெறும் சமயங்களில் சென்னை வரும் பேர்வழிகள் தங்க 6 லட்சம ரூபாய் செலவில் கட்டடம். என்ன அழகான ஆட்சி முறை!

மனித சமுதாயம் கலங்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாயம் என்றென்றும் கலங்கிய குட்டையாக இருக்கவேண்டுமென்பதற்காகவே உண்டாக்கப்பட்டது. சாதி—மத ஆசாரங்கள் இதை படித்த மாணவத் தோழர்கள் அறிவார்கள்.

சரித்திரகாலந்தோட்டு!

லண்டனில் மன்னர்களின் ஆட்சி நடைபெற்ற காலமுதற்கொண்டு, இன்றுவரை நடைபெற்ற கொலை-கொள்ளையும்; புத்தர்களுக்கும், சமணர்களுக்கும், முகம்மதியர்களுக்கும், கிருஸ்தவர்களுக்கும் நடைபெற்ற போராட்டங்களும், எண்ணற்றவை. இது சரித்திரகாலந்தொட்டு நடைபெற்றுவந்தன. மனிதசமுதாயம் வளர்ச்சியடைந்த பின்னர், மக்கள் ஜனநாயகம்பேசத் தொடங்கிய பின்னர்தான் இதுபோன்ற இழிவு மனப்பான்மைகள் கொஞ்சம் மறையலாயின. ஆகவே இதுபோன்ற ஜனநாயகத்தைக்காப்பாற்ற நாம் முயலவேண்டும். ஜனநாயகம் என்பது சாமான்யமானதல்ல, பலவித போராட்டங்களுக்கிடையே பெற்றதுதான் ஜனநாயகம், சுதந்திரம் என்பதெல்லாம்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை விரட்டியடிக்க வேண்டும் என்று அன்று தேசியத் தோழர்கள் கூக்குரலிட்டனர். அக்கூக்குரலின் எதிரொலி வாலிப உள்ளத்தில்தைத்து, வாலிபர்களைப்புரட்சித் தீயில் குதிக்கச்செய்தது. ஜமீன்தார்களும், மிட்டாதாரிகளும் தவிர ஏனையோர்தேசியப்போராட்டத்தில்பங்குகொண்டனர். மற்றவர்கள் செய்த மகத்தான தியாகத்தின் பலனாக, ஏகாதிபத்தியத்தால் சிதறடிக்கப்பட்ட மண்டை ஓடுகளின் காரணமாக நாம் சுதந்திரம் பெற்றோம். நமது கரங்களிலே பூட்டப்பட்டிருந்த இரும்புச் சங்கிலிகள் உடைத்தெரியப்பட்டன. என்றெல்லாம் கூறி தேசியத் தோழர்கள் பெருமைப்பட்டனர். இவர்களின் பெருமையில் நாங்கள் குறுக்கிடவில்லை. ஆங்கிலேயன் பொருளாதாரத் துறையிலும், சமூகத் துறையிலும் நம்மைச் சுரண்டுகிறான். ஆகவே இந்த "ஏகாதிபத்யம் ஒழிக" என்ற மூலமந்திரம் மூலைமுடுக்குகளிலெல்லாம் முழங்கப்பட்டது இது எட்டுத்திக்கிலும் எதிரொலி செய்தது வெள்ளையன் வெளியேறினான். பலன் என்ன? இதுவரை ஏக இந்தியாவாக இருந்த இந்தப் பாரத தேசம் பாக்கிஸ்தானாகவும், இந்துஸ்தானாகவும் பிரிக்க நேர்ந்தது. இதனால் யாருக்கு லாபம் என்று கூற முடியுமா? அதுதான் போகட்டும். இந்த தேசியத் தோழர்கள் ஆட்சிக்கு வந்தார்களே. இவர்கள் வந்தபின்பேனும் மக்களுக்கு ஏதாவது நன்மை செய்தார்களா?

சொன்னார்கள் ஆனால்...!

இங்கு தேசியத் தோழர்களும் வந்து மறைந்திருந்து கேட்டுக்கொண்டுதானிருப்பார்கள். இவ்வளவு ஆயிரக் கணக்கான பேர்களும் தி. மு. கழகத் தோழர்கள்தான் என்று நான் கூறமாட்டேன். கம்யூனிஸ்ட் தோழர்கள் இருக்கலாம், சோஷலிஸ்ட் தோழர்கள் இருக்கலாம், இந்து மாகா சபைக்காரர்களும் இருக்கலாம்.(பலத்தசிரிப்பு) ஆகவே நான் சொல்லுகிறேன், இவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் ஏற்பட்ட நஷ்டம் கொஞ்ச—நஞ்சமல்ல, இவர்கள் ஆட்சிக்கு வரும் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் தேர்தல் பிரகடனம் என்பதாக ஒன்றை வெளியிட்டார்களே, அந்தத் தேர்தல் பிரகடனப் பிரகாரம் ஒன்றையேனும் செய்தார்களா? பாலும்—தேனும் பாய்ந்தோடும்என்றுகூடச்சொன்னார்கள், ஆனால்நடந்தது என்ன? எங்கும் வறுமைதாண்டவம்தான் வேலையில்லாத் திண்டாட்டம், இருக்க இடமின்றிகஷ்டப்படும் கோர நிலைமை இவற்றை ஒழிப்போம் என்றார்கள். தொழிற்சாலைகளை எல்லாம் தேசியமயமாக்கப்படும் என்றார்கள். வெள்ளையன் கூடவந்த 144 தடை உத்திரவு, பாதுகாப்புச்சட்டம் இவை இருக்க முடியாது என்றார்கள். ஜனநாயகம், எங்கும் ஜனநாயகம் வழிந்தோடும் என்றார்கள். இந்த உலகமே ஓர் பூலோக சொர்க்கமாக மாற்றப்படும் என்றார்கள் இதை ஏழை மக்களும், விவசாயிகளும் உண்மை என்று நம்பினார்கள். ஏன்! கல்லூரி மாணவர்கள்கூட நம்பினார்கள். ஆனந்தப் பள்ளு பாடினார்கள். பின்னர்தான் தேசியத் தோழர்கள் அழைத்துச் சென்ற உலகம் ஓர் கனவுலகம் என்பதை அறிந்தோம்.

ஜாலியன் வாலாபாக் கொடுமை

வெள்ளையன் பல கொடுமைகள் செய்தான் என்பதை மறுக்கவில்லை. ஜெனரல் டயர் என்பவன்மக்களைச் சுட்டுத்தள்ளினான் என்பதையும் மறுக்கவில்லை. ஜாலியன் வாலாபாக் கொடுமையைக் காட்டி வெள்ளையன் செய்த இந்த அக்ரமத்தை ஒழிக்க இவர்களை இந்நாட்டைவிட்டே விரட்டியடிக்கவேண்டும் என்று சீறினாய். வெள்ளையன் வெளியேறினான். வெளியேறிய பின்பு நீ செய்த கொடுமை அன்று வெள்ளையன்செய்தகொடுமைகளைக் காட்டிலும் கொடுமையானதல்லவா? இதை நீயே யோசித்துப்பார் (கைத்தட்டல்) அன்று வெள்ளையன் சுடும்போது ஆராயிரம் மைல்களுக்கப்பால் இருந்துகொண்டு இதுபோன்று சுடுகிறோமே பின்னால் என்ன நிகழுமோ என்று வெள்ளையன் கரங்கள் நடுங்கியிருக்கும். ஆனால்.......! உன் கரங்களால் சுடும்போது ஓர் தெம்பு சுட்டீர்கள். துப்பாக்கியில் தோட்டா உள்ளவரை சுட்டீர்களே? காஷ்மீரிலிருந்து திருவனந்தபுரம்வரை இக்கொடுமையைச் செய்தீர்களே! இதுபோன்ற நிலை ஏன் வந்தது. பேச்சுசுதந்திரம், எண்ணச் சுதந்திரம் எல்லாம் இருக்கும் எமது ஆட்சியில் என்று அன்று சொன்னீர்களே ஆனால், இன்று ஜன சமுதாயம் சுடப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டதே உங்கள் ஆட்சியில் இதுபோன்ற கொடுமைகள் புரிந்த பிரான்சு நாட்டு லூயி, ரஷ்ய நாட்டுஜார் நிலைத்திருக்கமுடிந்ததா? இவற்றைக் கொஞ்சம் சிந்தியுங்கள். இதுபோன்ற நிலைமை நீடித்தால் என்ன ஆகும் என்பதை சிறிது கூற ஆசைப்படுகிறேன்.

குயில் கூவக்கூடாதாம்!

எண்ணற்ற எங்கள் புத்தகங்கள் தடைப்படுத்தப்பட்டன. பாண்டிச்சேரியிலிருந்து வந்து கொண்டிருந்த "குயில்" தடை செய்யப்பட்டது; ஏன் அங்கு அக் "குயில்" கூவினால் என்ன வந்துவிடும். இது தான் உங்கள் ஆட்சியில் மக்களுக்கு வழங்கும் நீதியா? உன்னுடைய ஆட்சியைக் கண்டு முசோலினியும், ஹிட்லரும், ஜார் அரசரும் கூட நல்லவர்கள் என்று கூறத் தோன்றுகிறது. புரட்சிக் கவிஞன் தனது ஒப்பற்ற கவியால் மக்களைத் தட்டி எழுப்பினான். அவன் கவிகள் தடைசெய்யப்பட்டது நாடகம் தடுக்கப்பட்டது. காரணம், வகுப்புவாதம் என்ற நொண்டிச் சாக்கு கூறினாய். இந்த நூல்கள் எல்லாம் வகுப்புவாதம்என்றால்இதுபோன்ற எண்ணற்றநூல்கள் இருக்கின்றனவே அவற்றையும் ஏன் தடைசெய்யவில்லை இதுதான் நீதியா? அண்ணா தீட்டிய ஆரியமாயை வகுப்புவாத ஏடாம். ஆரியமாயை அண்ணாவின் சொந்தக் கருத்தல்ல. "ஆபேடுபா" போன்ற மேல்நாட்டு அறிஞர்கள் பலர் எழுதிய புத்தகங்களைக் கொண்டு தொகுக்கப்பட்ட ஓர் தொகுப்பு நூல். இந்த நூல்வகுப்புவாத நூல் என்றால், அரசாங்கம் என்ன செய்திருக்கவேண்டும், மேல்நாட்டு அறிஞர்கள் எழுதிய மூல நூல்களை அல்லவா தடைசெய்திருக்கவேண்டும். இதிலிருந்துதெரிகிறதே இவர்கள் நோக்கம் எது என்று. ஏழை - பாட்டாளி மக்களின் மீது கோரத்தனமாக அணுக்குண்டு வீசிக்கொல்ல வேண்டாம். உலகத்திலே சமாதானம் நிலவவேண்டுமென வலியுறுத்த டெல்லியிலே சமாதான மாநாடு கூட்டினார்கள். இம்மாநாடும் தடை செய்யப்பட்டது. அதுமட்டுமல்ல! நாட்டெங்கிலுமுள்ள அரசியல் எதிரிகள் வேட்டையாடப்பட்டனர். கொடூரமான நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

சகிக்கமாட்டோம்...!

இன்றைய "மாலைமணி" பத்திரிகையில் ஓர் செய்தி வெளிவந்துள்ளது. மகன் கம்யூனிஸ்ட் என்பதற்காக தாயின் உடமைகள் எல்லாம் ஏலத்தில் விடப்போகிறார்களாம் தூத்துக்குடியில் இச்சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இதுபோன்ற அக்ரமம் நித்தம் நித்தம் நடைபெறுகிறது. தோழர் பி. கே. குமார் என்ற காவல் கைதி வெளியிட்ட ஓர் அறிக்கை நம்மை தலைகுனிய வைத்துவிட்டது. எரினால் குடை என்ற ஊரில் சிறைச்சாலையில் நடைபெற்ற சம்பவமிது பாதுகாப்புக் கைதியாக இருக்கும் கைதியினிடமிருந்து 'தான்கம்யூனிஸ்டுக் கட்சியில் இனிசேருவதில்லை' என்ற உறுதிமொழி கேட்கப்பட்டதாம். அவன் மறுக்கவே அவனைப் போலீஸார் பூட்ஸ் காலால் உதைத்தனர். நாசியிலிருந்தும், வாயிலிருந்தும் ரத்தம் பீரிட்டது. தாகவிடாய் மேலோங்க தண்ணீர் கேட்டான் கைதி. ஆனால் கிடைத்தது சிறுநீர்! (வெட்கம்-வெட்கம் என்ற குரல்) அது மட்டுமல்ல! கைதியின் மூர்ச்சை தெளிந்து எழுந்தால் மீண்டும் உதைத்தனர். அத்துடனில்லாது, அவனை அன்புடன் வளர்த்த தாய், சீராட்டி வளர்த்த தாய் அவன் கண் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டாள். புன்னகை செய்தான் கைதி. திடீரெனத் தாயின் துயில் உரியப்பட்டது. கைதியின் மர்ம உறுப்புகளும், தாயின் மர்ம உறுப்புகளும் ஒன்றாக...? (சகிக்க மாட்டோம் இக்கொடுமையை என்ற கூட்டத்தினர்) இதைக்கூறும் நான் கம்யூனிஸ்ட் அல்ல! எனக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மாறுபாடுகள் அதிகம். அரசியல் கொள்கையிலே கூட பலவிதமான மாறுதல் கொண்டவன் நான். இருந்தாலும் இதை ஏன் சொல்கிறேன் என்றால் குற்றம் புரிந்த கட்சி எதுவாக இருந்த போதிலும் அது கண்டிக்கத்தக்கதே. கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் செய்யும் பலாத்காரத்தையும் கண்டிக்கிறோம் ஆபத்தான பலாத்காரத்தைப் பின்பற்றுகிறீர்கள் என்றும் சொல்ல ஆசைப்படுகிறேன்,

சிறைச்சாலையில் நேரு

நேரு உட்பட தேசிசத் தோழர்கள் சிறைச்சாலையில் இருந்த போது இவர்களுக்கு முதல் வகுப்பு வசதி தரப்பட்டது. இவர்கள் விரும்பும் விளையாட்டுக்களை விளையாட அனுமதி அளிக்கப்பட்டது. மனைவி-மக்கள்-உற்றார், உறவினர்கள் பார்க்கவும் வசதிசெய்யப்பட்டது. ஆனால் இன்று இவர்கள் ஆட்சியில் சிறைச்சாலை சென்றவர்கள் உயிருடன் வெளிவந்தாலே போதும் என்ற எண்ணம் உண்டாகிவிட்டது. இவர்கள் பனிக்கட்டி நிறைந்த சைபீரியா சென்றார்களா? கொடிய விலங்குகள் வாழும் காடுகள் சென்றார்களா? இவர்கள் சிறைசென்றபோது இந்த நிலை ஏற்பட்டதா? சேலம் சிறைச்சாலையிலே சுற்றிவர மதிற்சுவர்கள் இருக்கின்றன. இந்த மதிற்சுவர்களைத் தாண்டி கைதிகள் வெளியே போகமுடியாது. இந்த நிலையில் இவர்கள் சுட்டனர். இந்த நாட்டின் வருங்கால வாலிபர்கள் பலர் செத்து மடிந்தனர். அடியும் உதையும்தான் இவர்களை இவ்வுலகைவிட்டே அனுப்பியதே தவிர வேறு ஒன்றுமில்லை. திருவாங்கூரிலே சுரேந்திரன் என்ற கைதி காலை 6 மணிக்குச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டான். அவன் சிறைக்குக்கொண்டு போகப்பட்டபோது நல்ல ஆசானுபவனாகவே சென்றான். அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அதாவது 10 மணிக்கெல்லாம் சுரேந்திரன் மாண்டான் என்ற செய்தி மலையாளப் பத்திரிகைகளில் வெளிவந்தன. மாரடைப்பால் சுரேந்திரன் மாண்டான் என்று அரசாங்கம் அறிக்கை வெளியிட்டது. இதை மக்கள் நம்ப மறுத்தனர். கிளர்ச்சி வலுத்தது. சுரேந்திரனின் தகப்பனாரை அழைத்து அவருக்கு லஞ்சம் தந்து அரசாங்கம், சுரேந்திரன் மாரடைப்பினால்தான் மாண்டான் என்று வாக்கு மூலம் வாங்கிக் கொண்டது.

(தொடரும்)

மதுரை தி.மு.க. ஆண்டுவிழா

அரசியல் பொருளாதார சுரண்டல் ஒழிக!

முன்னணி வீரர்களின் முழக்கம்

(நமது நிருபர்)

மதுரை, மே 13—

இன்று இரவு 7 மணிக்கு இந்நகர் கீழச்சந்தைப்பேட்டை திராவிட முன்னேற்ற இளைஞர் மன்றத்தின் இரண்டாவது ஆண்டு ஆரம்ப விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த மன்றத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு பொதுக்கூட்டம் ஒன்று தோழர் ல. வ. கிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத் துவக்கத்தில் தோழர் பச்சையப்பன் இயக்கப் பாடல்களைப் பாடினார்.

கொடி ஏற்றம்!

பின்னர் தி. மு. கழகக் கொடியைத் தோழர் கலைத்தூதன் ஏற்றி வைத்து, கொடியின் மாண்புபற்றியும், நாம் அடைய வேண்டிய திராவிடத்தின் லட்சியம் பற்றியும், மற்றும் அரசியல், பொருளாதாரம் சமுதாயம் ஆகியதுறைகளில் திராவிடர்களாகிய நாம் எவ்விதம் சுரண்டப்படுகிறோம் என்பதை விளக்கியும், சுரண்டலற்ற ஓர் ஒப்பற்ற சமுதாயத்தை நிறுவி, அதில் ஏழை—பணக்காரன் என்ற பேதமையை ஒழித்து எல்லோரும் சமம் என்ற லட்சியக் கோட்பாடு அமைப்பதுதான் தி. மு. கழகத்தின் திட்டம் என்றும், இதில் வாலிபர்கள் முன் வந்து சேவைசெய்ய வேண்டுமென்றார்.

அழகிரி படத்திறப்பு!

அடுத்தபடியாக தோழர் எம். அய்யாச்சாமி—தளபதி அழகர்சாமி அவர்களின் படத்தைத் திறந்து வைத்து, திராவிடர் இயக்கம் என்றால் அதை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணம் எங்கெங்கே தோன்றுகிறதோ, அங்கெல்லாம் தோழர் அழகர்சாமி சென்று கூட்டம் கூட்டி, தனது கருத்தை எடுத்துக் கூறினார் என்றும், இன்னல் கண்ட இடத்திற்குச் சென்று மக்களுக்குச் சேவை செய்து, விழிப்பூட்டிய மேதை என்றும், இதன் காரணமாகவே அவர் இருதய நோய் கண்டு மடிந்தார் என்றும், இவரை ஒழித்துக்கட்ட தேசியத் தோழர்கள் செய்த முயற்சியும், குறிப்பாகத் தஞ்சாவூர் மாவட்டத்தில் செய்த முயற்சியும், இந்த நேரத்தில் தோழர் அழகிரி தனது சொல்வன்மையால் அவற்றைத் தவிடுபொடியாக்கினார் என்றும், அப்படிப்பட்ட ஓர் தியாகியின் படத்தை இன்று தான் திறந்துவைப்பதாகவும், இங்குள்ள வாலிபர்கள் ஒவ்வொருவரும், ஒரு அழகிரியாகத் திகழவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ஆண்டு அறிக்கை

இளைஞர் மன்றச் செயலாளர் தோழர் எஸ். சி. மாணிக்கம் கடந்த ஆண்டு மன்றம் செய்த சேவையைப்பற்றியும், அதன் நடைமுறை வேலையைப் பற்றியும் பிரஸ்தாபித்து ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார்.

இளைஞர் கடமை!

பின்னர் நாகர் கோவில் தோழர் வை. சுப்பிரமணியம் இளைஞர் கடமை என்பதுபற்றிப் பேசும்போது மேல்நாடுகளில் சுதந்திர ஆர்வம் கொண்டபோது அந்தந்த நாட்டு இளைஞர்கள்தான் புரட்சித் தீயில் குதித்தனர் என்றும் குறிப்பாக ஐரிஷ், துருக்கி போன்ற நாட்டில் அந்த நாட்டு இளைஞர்கள் செய்த தியாகம் கணக்கிலடங்காதது என்றும், அதுபோல, நமது திராவிடநாட்டின் விடுதலைக்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தான் தேவை என்றும், அப்போதுதான் நம் லட்சியம் ஈடேறும் என்றும், அன்று வாழ்ந்த இனம் இன்று ஆரியர்களின் சூழ்ச்சியால் வீழ்ந்துபட்டோம், ஆரியக்கலாச்சாரம் நம்மை அடிபணியச் செய்தது, இன்று திராவிடம் மிகவும் கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டது. எனவேதான் இந்த நிலைமை மாறவேண்டும், ஒன்றேகுலம்-ஒருவனே தேவன் என்ற கோட்பாடு மக்களிடையே நிலவவேண்டும் என்றும், இன்று நாம் வாழ வகையற்றவர்களாக இருக்கிறோம். சமுதாயத்திலே உள்ள இக்குறைபாடுகள் நீக்கப்பட்டு, ஆரிய கலாச்சாரம் ஒழியவேண்டும், அப்பொழுது தான் திராவிடம் சுபிட்சமாக வாழ முடியும். ஆகவே அடிப்படை சீர்திருத்தமாக நம் கழகம் இந்தப் பணியைச் செய்து வருகிறது. சமுதாயத் துறையிலே அறிவுப் புரட்சியைச் செய்கிறது.

ஜனநாயகம் வளர...!

இந்த நாட்டில் உண்மையான ஜனநாயகம்வளர வேண்டுமானால், கடவுள் பேரால், மதத்தின் பெயரால், ஜாதியின் பெயரால் இழைக்கும் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும். சுதந்திரம் பெற்றுவிட்டால் சுகவாழ்வு கிடைக்கும் என்று தம்பட்டமடித்தார்கள். இந்த சுயாட்சியால் டாடாவும், பிர்லாவும், பனியாக்களும்தான் சுகம்பெற முடிந்ததே தவிர, ஏழைகள், விவசாயிகள் ஏதாவது நலம் பெற முடிந்ததா? இன்று முதலாளியின் நிலையையும், பாட்டாளியின் நிலைமையையும் சீர்தூக்கிப் பார்த்தால் இந்தச் சுதந்திரம்—சுயாட்சி எவருக்குப் பயன்பட்டது என்பது விளங்கும்.

எனவேதான், நமது தி.மு.கழகம் இந்தப் பணியை நாட்டிலே செய்து வருகிறது இதைக் கண்ட சர்க்கார் நமது கூட்டத்தைத் தடை செய்தும், புத்தகங்களைத் தடை செய்தும், நாடகங்களை நடத்தக்கூடாது என்றும் தடை செய்து வருகிறது. இந்த நிலைமை நீடித்துக்கொண்டே போகுமானால், இளைஞர்களாகிய நாம் தடை செய்த புத்தகங்களைத் தெருக்களிலே விற்பனை செய்யவும், தடை செய்த நாடகங்களை நடித்துக் காட்டவும் கலங்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டார். பின்னர் தோழர் மனோகரன் நீண்ட நேரம் பேசினார். (விவரம் மற்றொரு பக்கம்)

மக்களை மதிக்காத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யாவிடில் ஆபத்துக்குள்ளாகுபவர் மக்களே.

காங்கிரஸ்காரர்களின் பழைய தியாகங்களை நினைத்து மக்கள் ஏமாந்துவிடக்கூடாது. சிறந்த ஒழுக்கமுடையவர்களையே மக்கள் தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மக்களுடைய துன்பங்களைப் போக்குவதில் அக்கறை செலுத்தாத அரசாங்கத்தை; மக்கள் நிலையை உயர்த்தாத அரசாங்கத்தை மாற்றவேண்டியது மக்களின் கடமை என்பதை வற்புறுத்திக்கூற விரும்புகிறேன்.

பிணியைக் குணப்படுத்த முடியாத டாக்டரை நாம் மீண்டும் விரும்புவதில்லை. அவரை நீக்கிவிட்டு வேறு நல்ல டாக்டரின் உதவியை நாடுகிறோம். அதேபோலத் தான் மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர்கள் விஷயத்திலும் மக்கள் நடந்துகொள்ள வேண்டும்.

....

மாணவர் இலக்கிய மன்றம்

பெஸண்ட் ரோட், திருவல்லிக்கேணியிலுள்ள இம்மன்றத்தின் 2-ம் கூட்டம் 13—5—51 அன்று மாலை தோழர் ரா. சண்முகம் தலைமையில் நடந்தது. மன்ற மாணவ மாணவிகளான, சீராளன், டிக்காராம், மணி, இந்திராணி ஆகியோர், "பழக்க வழக்கங்கள்" என்பது பற்றிப் பேசினர். தோழர் மா. ரா. இளங்கோவன் 'நல்ல எதிர்காலம்' என்பதுபற்றிப் பேசினார். இறுதியாக திராவிடப் பண் பாடலுடன் கூட்டம் முடிந்தது.

திண்டிவனம் சமூக சீர்திருத்த மாநாடு

மாநாட்டு டிக்கட்டுகள் விற்பனைக்காக பெற்றுக்கொண்டுள்ள தோழர்கள் தயவு செய்து 18-5-51-க்குள் விற்பனை பணத்தையும், மீதமுள்ள டிக்கட்டுகளையும் அனுப்பி உதவ வேண்டுகிறேன். அன்பன்

ஆ. தங்கவேலு
வரவேற்புக்குழுத் தலைவர்.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

19—5—51

பாலூர்

கே. ஏ. மதியழகன்.

21—5—51

மஞ்சகுப்பம்

அண்ணாத்துரை, கே. ஏ. மதியழகன்.

22—5—51

வளவனூர்

அண்ணாத்துரை.

தொழிற்சங்க காங்கிரஸ் அடிவருடிப் போக்கு

தொழிலாளர் சங்கப் பொதுக்கூட்டத்தில் கண்டனம்

மதுரை, மே 13—

இந்நகர் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் 6-5-51 ல் நடைபெற்றது கூட்டத்திற்குச் சுமார் 6 ஆயிரம் தொழிலாளர்களும், பொதுமக்களும் வந்து கூடி இருந்தனர். கூட்டத்திற்கு மதுரை பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் காரியதரிசி தோழர் எம். என். ஆதிநாராயணன் தலைமை வகித்தார்.

அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

சிறையில் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் எஸ். ஐ. ஆர். லேபர் யூனியன் தலைவர் தோழர் எம். கல்யாணசுந்தரத்தை ஜாமீனில் விடுதலை செய்யக் கோரியும், பி. ராமமூர்த்தி மீதுள்ள பிடிவாரண்டை ரத்துசெய்ய வேண்டுமென்றும், பாதுகாப்பு முகாமிலே அடைபட்டுக்கிடக்கும் பாதுகாப்புக் கைதிகளை விடுதலை செய்து, வரும் பொதுத் தேர்தலில் மக்கள் அனைவருக்கும் பிரஜா உரிமை வழங்க வேண்டுமென்றும், தொழிலுறவு, இதர தொழிற்சங்க கறுப்பு மசோதாக்களை வாபஸ் வாங்க வேண்டுமென்றும், மதுரை மில்லில் தேய்மான நிதி, ரிஸர்வ்நிதி என்று பணத்தை ஒதுக்கிவிட்டு, தொழிலாளர்களுக்கு இரண்டு மாத போனஸ் தந்திருப்பதை, நகர் இந்திய தேசிய தொழிற்சங்கம் ஏற்றுக்கொண்டதைக் கண்டித்தும், இது தொழிலாளர்களின் சம்மதத்தைப் பெறுமலே செய்திருப்பதால், இந்த ஒப்பந்தம் தொழிலாளர்களைக் கட்டுப்படுத்தாதென்றும், வருடத்திற்குநான்கு மாதபோனஸ் கொடுக்க வேண்டுமென்றும், இதர மில்களில் மூன்று மாத போனஸ் வேண்டுமென்றும், நகரில் உள்ள பப்ளிக்ஹாலை அனைவரும் கூட்டம் நடத்தத்தகுந்த அளவு கட்டி வாடகைக்கு விடவேண்டுமென்றும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (ந-வி)

....

ஒத்திவைப்பு

நாகப்பட்டினம் 20-5-51-ல் நடக்க இருந்த தி. மு. க. பொதுக் கூட்டம் மாணவர்கழகதிறப்புவிழாவில் பேச இருந்த தோழர் நாகர் கோவில் "மனோகரன்," வை. சுப்ரமணியம் ஆகியவர்கள் வர இயலாமையால் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. தேதி பின்னர் அறிவிக்கப்படும்

இனி நடப்பவை

புதூர் (இராமநாதபுரம்):- 18—5—51ல் தி. மு. க. திறப்பு விழாக் கூட்டத்தில் சி. பி. சிற்றரசு பேசுவார்.

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45 Muthumari Chetty Street, Madras-1.

பொன். கு. கோதண்டபாணி
"அறிவாலயம்"
25/6, திருவள்ளுவர் குடியிருப்பு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-600 078.

விலை முக்காலணா

இலங்கை 8 சதம்

சந்தா விவரம்

1 ஆண்டு ரூ. 18-0-0
6 திங்கள் ரூ. 9-0-0
3 திங்கள் ரூ. 4-8-0

தனிப்பிரதி முக்காலணா. மூன்று மாதங்களுக்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

மாலைமணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

ஆசிரியர் : மு. கருணாநிதி

Most Popular in the South

விளம்பர விகிதம்

அங்குலம் பத்தி ஒன்று ரூ. 5-0-0
நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு.

மானேஜர்
"மாலை மணி"

Phone: No 4502

மாலை 2 | சென்னை : 15—5—51 செவ்வாய்க்கிழமை ★ வெளியூர் : 16—5—51 புதன்கிழமை | மணி 158

மானும்-மழுவும் ஆடாது மங்கை ஏன் ஆடுகிருள்?

உணவு நெருக்கடி தீராது

—

மத்திய அரசாங்கத்தின் அசட்டை

சென்னை, மே 15—

அடுத்து வரும் சில மாதங்களில் சென்னை இராஜ்யத்தில் உணவு நிலைமை திருப்திகரமாக இராது. கொள்முதல் குறையும். எனவே, இந்திய அரசாங்கம் அனுப்பவேண்டியதைக் குறைக்காமலும் காலாகாலத்திலும் அனுப்பாவிடில் தொல்லையும் நெருக்கடியும்பெருகிப் போகும்

இவ்வாண்டு முதல் 5 மாதங்களுக்கு சென்னைக்கு வரவேண்டிய கோட்டா லட்சத்து 80 ஆயிரம் டன் கோட்டா. ஆனால் மத்தியஅரசாங்கம் அனுப்பியிருப்பதோ ஒரு லட்சம் டன் தான். கொள்முதல் இந்த மாதங்களில் திருப்திகரமாயிருந்ததால் நிலைமை சமாளிக்கப் பட்டது. ஆனால் அடுத்துவரும் மாதங்களில் கொள்முதல் குறையும், செப்டம்பர் வரை 30 அல்லது 40 ஆயிரம் டன்தான் கிடைக்கும். எனவே, இந்தியா அரசாங்கம், போதிய அளவுத் தானியங்களைக் காலா காலத்தில் அனுப்பி வைக்க வேண்டும். அதுவும் சென்னைக்கேஅனுப்பிவிடாமல்தென்னாட்டுத் துறைமுகங்களில் பரவி இறக்குமதி செய்வதற்கேற்றவாறு அனுப்ப வேண்டும். அப்பொழுதுதான் எல்லா இடங்களுக்கும் உடனுக்குடன் உதவி செய்யக்கூடும் என்று சென்னை உணவு இலாக்கா அதிகாரிகள் இந்திய அரசாங்க உணவு இலாக்கா டைரெக்டரிடம் வற்புறுத்திக் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

—

நிலக்கரி வரி உயரும்

புதுடில்லி, மே 15—

நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து ரயில் மூலம் அனுப்பப்படும் மிருதுவான நிலக்கரிக்கு டன் 1-க்கு 3 அணுவும், கடின நிலக்கரிக்கு டன் 1-க்கு 4½ அணுவும் உள்நாட்டு வரி விதிக்கப்படும்.

அரசியல் அரிச்சுவடி தெரியா ஆளவந்தார்கள்!

…………………(0)…………………

ஏழை எளியவன் என்ற பாகுபாடு இல்லை!

……………(0)……………

பட்டம் பதவியல்ல வேண்டுவது பாடுபடும் பாட்டாளியின் பசி தீரவேண்டும்

சேலம் மாவட்ட தி. மு. க. முதல் மாநாட்டில் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணு ஆற்றிய சொற்பொழிவின் 18-5-51-ன் தொடர்ச்சி:

திராவிட கழகம் தேர்தலில் போட்டி போடுவதில்லை என்று கூறிவிட்டது. இந்தத் தீர்மானம் என்னல் சேலத்தில் கூடிய மாநாட்டில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படடது. தீர்மானத்தைக் கண்ட சீமான்கள் சிரினர்கள். ஜமீன்தார்கள் ஜாடை காட்டினர்கள், மிட்டா மிராசுகள் மிரட்டிப் பார்த்தார்கள் நான் பெயர் சொல்லப் பிரியப்படவில்லை. ஒருவர் காட்டிய பயத்தைப்பற்றி ஒரு விஷயத்தை உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன், எவ்வளவு வேடிக்கையானது, வேடிக்கையானது மட்டுமல்ல வேதனை தாக்கூடிய விஷயம். சேலம மாநாடு நடந்த இடத்திற்குப் பக்கத்தில் ஒரு சர்க்கஸ் நடந்து கொண்டிருந்தது. அவர் எனக்குக் காட்டினர். "சர்க்கஸ் நடக்கிறது, போய்ப் பார்க்கலாம் என்று கூறினேன். சர்க்கஸ் பார்க்க உன்னை அழைக்கவில்லை. தேர்தல் தீர்மானத்தை நீ நிறைவேற்றினல் இதனுள் இருக்கும் புலிக் கூண்டைத் திறந்து மாநாட்டுப் பந்தலுக்குள் விட்டுவிடுவேன் ஜாக்கிரதை" என்று உறுமினர்-உதட்டையும் கடித்தார்—"செய்யுங்கள் தைரியமிருந்தால்—நாங்கள் பயப்பட மாட்டோம். சேர, சோழ, பாண்டியன்பரம்பரை வழி வந்தவர்கள், புலிக் கொடியேந்தி புல்லர்களைப் புறமுதுகிடச் செய்தபரம்பரையை சேர்ந்த காளைகள் கூடியிருக்குமிடம் இது, புலியோ-சிருத்தையோ சிங்கமோ அவர்களை ஒன்றும் செய்யாது. ஆனல் அவர்கள் மத்தியில் புகும் புலியைப் பூனைக்குட்டியாக்குவர் எமது தோழர்கள்" என்று இறுமாப்புடன் கூறினேன். பின்னர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது சீமான்களும், பூமான்களும். பட்டைச் சரிகை வேஷ்டிகளும் வெளியேறினர் அன்று அறுத்துக் கொண்ட சீமான்களின் தொடர்பே இன்றைய வளர்ச்சிக்குக் காரணம்

சீமான்கள் நடத்தக்கூடியமாநாடு என்றால் இப்படி திறந்த வெளியில் இவ்வளவு பெரிய பந்தலைப் போட்டு ஒலி பெருக்கிகளை அமைத்து நடத்த மாட்டார்கள்—எங்கேயாவது ஓர் மண்டபத்தில் கூடுவார்கள் — முடிந்ததும் விலைமதிப் பேரிய காரில் போய்விடுவார்கள். நேற்று பந்தல் சாய்ந்ததே இப்படிப்பட்ட சமயத்தில் சீமான்களையும் பூமான்களையும் நாம் காண முடியுமா? அல்லது அவர்கள் தான் இந்த பக்கம் திரும்பியாவது பார்ப்பார்களா? பார்க்க மாட்டார்கள். வறுமையால் வாடிய கூட்டத்தின் வல்லமையே பந்தல் நிமிர்ந்ததற்குக் காரணம். திராவிட இளங்காளைகள் நேற்று காட்டிய உற்சாகம், உழைப்பு-ஓயாத ஊக்கம் நமது எதிர்கால திராவிடத்தை எளிதில் செப்பனிட முடியும் என்பதைக் காட்டிவிட்டது.

முன்பெல்லாம் நான் மாநாடுகளுக்குச் செல்வதென்றால் எனக்காக ரயிலடிக்குக் கார் வந்து காத்திருக்கும். ரயிலைவிட்டிறங்கியதும் காரில் உட்கார்ந்துகொள்வேன். கார் புறப்படும்-கார் ஓட்டும் டிரைவர் காங்கிரஸ்காரனயிருப்பான்

(3-ம பக்கம் பார்க்க)

தேர்தலில் வெற்றி பெற மந்திரிகளின் சதி

……………(0)……………

அரசாங்க அதிகாரிகள் ஓட் திரட்டும் ஏஜெண்டுகளா?

…………(ஃ)…………

டாக்டர் அம்பேத்கார் கண்டனம்

புதுடில்லி, மே, 15—

தேர்தலில் வெற்றிபெறுவதற்காக மந்திரிகள் அரசாங்க அதிகாரிகளைக்கொண்டு ஓட் சேகரித்து வருகிறர்கள் என்பதை அறிந்து மிகவும் வருந்துவதாகவும், அரசாங்க அதிகாரிகளின் இந்த ஒழுங்கற்ற தன்மையை வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஆனல் இதைத் தடுக்கச் சட்டம் பிறப்பித்தால் பலன் கிட்டாது என்றும் டாக்டர் அம்பேத்கர் மத்திய சட்டசபையில் தெரிவித்தார்.

மாலை மணி

சென்னை 15—5—51 செவ்வாய்க்கிழமை

திருத்தம் - தித்திக்குமா?

வகுப்புவாரி உரிமைக்காக சென்னை மந்திரிகள் வரிந்து கட்டிக்கொண்டு நடத்திய போராட்டம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. இந்திய சர்க்காரிடம் இதைத் தவிர அதிகமாக எதுவும் எதிர்பார்ப்பதற்கில்லை என்று மந்திரி பக்தவத்சலனார் திட்டமாகக் கூறிவிட்டார்.

கல்வி, சமூக, பொருளாதார விஷயங்களில் பிற்பட்ட நிலையிலுள்ளவர்களுக்கு தனி வசதி அளிப்பது என்பதாக அரசியல் சட்டத்தை திருத்த ஒரு மசோதா வந்திருக்கிறது. இது பற்றிச் சரியான விளக்கம் கூற முடியாத நிலையிலே—குழப்பமான மனதுடன் காட்சியளிக்கிறார்கள் சென்னை மந்திரிகள். சமூக நீதி அழிக்கப்படாமல் பாதுகாக்கப் படும் என்று ஒரு புறத்திலே உறுதி அளிக்கிறார்கள். அதே சமயத்தில் பிற்பட்ட பிரிவினர் என்றால் யார் என்பது தெரியவில்லையென்று மூக்கில் விரலை வைக்கிறார்கள். ஆனாலும் சமாளித்துக்கொண்டு திருத்தப்பட்ட சட்டத்திலே 'கம்யூனல்' என்ற அடைமொழி இருக்காதே தவிர எல்லா பிரிவினருக்கும் சமூகநீதி வழங்க இந்தத் திருத்தங்கள போதுமானது என்று பக்தவத்சலம் திருப்திப்படுகிறார்.

"கம்யூனல் ஜி. ஓ." செத்துவிட்டது. இப்படிக் கண்ணீர் விடுவதும் பக்தவத்சலம் தான்! இதைத் தவிர மத்ய சர்க்கார் எதையும் செய்ய மாட்டார்கள் என்றுதெரிந்தவுடனே "இதுவே போதும்" என்று அடுத்த ஆறுதலைக் கூறுகிறவரும் அவரே தான்.

பிற்பட்டவர்கள் பற்றி இப்போதே பிரச்சினை எழுந்துவிட்டது. ஆரிய ஏடுகள், கேடயங்கள் ஏந்திப்புறப்பட்டுவிட்டன ஜாதியின் காரணமாக பிற்பட்டவர்களைப் பிரிக்கக் கூடாது என்று பிரயாஸ்திரம்தொடுததுவிட்டது சுதேசமித்திரன்.

"பிற்பட்டவர் யார் என்பது விளக்கப்படவில்லை. அதை யார் விளக்குவது என்பதும் தெரியவில்லை..." இதுவும் பக்தவத்சலனாரின் பரிதாபச் சிந்துதான். சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் பார்ப்பனரல்லாதவர்கள் அத்தனை பேரும் பிற்பட்டவர்கள்தான். இதை நாம் மட்டுமல்ல நாட்டை ஆள வந்த அமைச்சர்களும் கூறியிருக்கிறார்கள். ஆனால் இப்போது கூறுகிறார்கள் பிற்பட்டவர்கள் யார் என்று தெரியவில்லையென்று!

பிற்பட்டவர்கள் யார் என்பதை புள்ளி விவரத்தோடு மத்ய சர்க்கார்தான் சொல்லப் போகிறது. அப்போது மித்திரன் கூட்டம் மிரட்டும் மொழிகளால்—உருட்டும் விழிகளால்—பிராமணரிலும பிற்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று சில ஆதாரங்களை உற்பத்தி செய்துகொண்டு ஆவேசத் தாண்டவமாடப் போகிறது. அதற்கான முஸ்தீப்புகளை நாம காணும் வாய்ப்பிருப்பதால் "பிற்பட்ட பிரிவினர்" என்ற பிரச்னைக்கு ஒரு பெரும் போராட்டம் இருக்கத்தான் போகிறது என்று முடிவு கட்டுகிறோம். இப்போது வரபபோகிற மசோதா பற்றிய விளக்கங்கள் கூட சென்னைச் சர்க்காரின் யூகமாய்த்தானிருக்கிறதேயொழிய குழப்பமற்ற சூழ்நிலை நம் கண்ணுக்குத் தெரியவில்லை.

கல்வி ஸ்தாபனங்களில் மாணவர்களைச் சேர்க்கும்விதிகள் பற்றி விளக்கும் 29-வது ஷரத்திற்கு திருத்தம் கொண்டுவரப்படவில்லை. 15 (3) ஷரத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கும்திருத்தத்தை வைத்து சென்னைஆட்சிப் பீடம் பேசுகிறது. எல்லா பிரிவினருக்கும் சமூக நீதி வழங்க 15 (3) ஷரத்திற்கு திருத்தம் கோருவதே போதுமானது. 29-வது ஷரததை 15 (3) ஷரத்தின் விளக்கத்திற்கேற்ப விளக்கப்படுத்திக்கொள்ளலாம் என்று சென்னைச் சர்க்கார் யூகிக்கிறது

முதலில் இந்த யூகம் கனவாகாமலிருக்க வேண்டும.

அடுத்தபடியாக பிற்பட்டவர்கள் பார்ப்பனரல்லதார் அத்தனை பேருந்தான் என்ற நல்ல முடிவு உதயமாக வேண்டும்.

மூன்றாவதாக "கம்யூனல்" என்ற அடைமொழி இல்லாவிட்டாலுங்கூட நமக்கு கவலையில்லை; நாம் 'லேபிளை'ப் பற்றிக் கவலைப் படாதவர்கள் ஆதலால்—கம்யூனல் ஜி. ஓ.-வினால் ஏற்பட்ட புது மலர்ச்சி கருகிவிடக் கூடாது.

இந்த நல்ல பாதையிலேயே அரசியல் சட்ட திருத்தம் அடியெடுத்து வைக்குமா? அல்லது சென்னை சர்க்காராவது சீரான பாதையக் காட்டுவார்களா?

நம்பிக்கையில்லை நமக்கு! நாமே தான் கைகாட்டிகளாய் அமையவேண்டும்...களம் நோக்கிச் செல்லும் வீரர்களுக்குப் பாதை காட்ட!

நமக்குத் தேவையானது கம்யூனல் ஜி. ஓ. என்ற வார்த்தைகள் அல்ல. அதனால் ஏற்படும் பலன். அந்தப் பலன எதன் பெயரால் ஏற்பட்டாலும் சரி. திருத்தம் தித்திக்க வேண்டும், இல்லாவிட்டால் இருக்கவே இருக்கிறது சேலம் தீர்மானம்.

நாடு கண்டிராத பயங்கர அடக்குமுறை

—(:0:)—

மக்களுக்கு பெருந்துரோகம் இழைத்த காங்கிரஸ்

............(-)............

கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாகாண ஆர்கனைசிங் கமிட்டியின் காரியதரிசி பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—

1947 ஆகஸ்டு 15-யன்று இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டதாகத் தம்பட்டமடிக்கப்பட்டது. இது உண்மையான சுதந்திரம் அல்ல என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றிக் கடந்த நான்கு ஆண்டுக் காங்கிரஸ் ஆட்சி நிரூபித்து விட்டது.

இந்த ஆட்சியின்கீழ், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள நம் நாட்டின் பொருளாதாரத்தின்மீது ஆதிக்கம் செலுத்துவது நீடிக்கிறது. நம் நாட்டின் தொழில்களிலும், சுரங்கங்களிலும், தோட்டங்களிலும், பாங்குகளிலும், இன்ஷூரன்ஸ் கம்பெனிகளிலும் பிரிட்டிஷ் மூலதனம், நேரடியான பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்தது போன்றே இந்த காங்கிரஸ் சர்க்காரால், உறுதியாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அதோடு கூடவே, சோம்பேறிக் கூட்டமாகிய நிலச்சுவான்தாரின் சுரண்டலும், பெரு முதலாளிகளும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்ததுபோன்றே உறுதியாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

தொழிலாளி வர்க்கத்திற்கோ இந்நான்கு ஆண்டுகளும் அவர்களுடைய வாழ்க்கை வசதிகளின் மீதும், வேலைச் சவுகரியங்களின் மீதும் தீவிரப்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்புகள் நிறைந்து இருந்து வந்திருக்கின்றன. உண்மைச் சம்பளம் குறைந்து வந்திருக்கின்றது மேலும் குறைந்துகொண்டிருக்கின்றது முதலாளித்துவ "ராஷனலைசேஷன்" வேலை தீவிரப் படுத்தப்படுவது, வேலைப்பளு அதிகரிப்பு, முதலிய முறைகளெல்லாம் அமுலாக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவற்றினால் வேலை கடுமையாக்கப்பட்டு, தொழிலாளிகளின் கஷ்டம அதிகரித்துள்ளது மட்டுமல்ல லட்சக்கணக்கான தொழிலாளிகள் வேலையின்றி நடுத்தெருவில் விடப்பட்டிருக்கின்றனர்.

கை நெசவுத் தொழிலாளிகளும் மற்ற சிறு கைத்தொழிலாளிகளும் தொழிலின்றி, வேலையில்லாது தவிக்கின்றனர். அநாதைகளாக அவர்கள் திரிந்துகொண்டிருக்கின்றனர். இந்தச் சகிக்க முடியாத வாழ்க்கையிலிருந்து தப்புவதற்குத் தற்கொலை ஒன்றுதான் வழி என்று பலர் தற்கொலை செய்துகொண்டு வருகின்றனர்.

நம் மக்களில் 80 சதமாக உள்ள விவசாயிகள் முன்போலவே நசுக்கிப் பிழியப்படுகின்றனர் நிலச்சுவான்தாரின் தாங்க முடியாத குத்தகையும், வாரமும், லேவாதேவிக்காரனின் அநியாய வட்டியும் சேர்ந்து அவர்களைக் கொள்ளைக்கு உள்ளாக்கி வருகிறது. சர்க்காரின் தாங்க முடியாத வரிச்சுமை அவர்களை அழுத்துகிறது. அவர்கள் மேலும் மேலும் ஓட்டாண்டியாகிக் கொண்டு வருகின்றனர். நிலமில்லாத விவசாயிப் படை நாளுக்குநாள் அதிகரிக்கிறது.

தொழில்கள் நிரந்தர நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருக்கின்றன. பல சிறு, நடுத்தர, முதலாளிகள், அந்நிய சரக்குகளோடு போட்டிபோட முடியாமல் தங்கள் தொழிற்சாலைகளை மூடிக்கொண்டு வருகின்றனர்.

தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், மத்திய வர்க்கத்தினர் ஆகியோர் நடத்தும் போராட்டங்களெல்லாம், பயங்கர அடக்குமுறை கொண்டு நசுக்கப் படுகின்றன. இதற்கு முந்தி என்றுமே இவ்வளவு பயங்கர அடக்குமுறையை நாடு கண்டதில்லை. பிரஜா உரிமைகள், ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

மக்களின் வீரம் செறிந்த போராட்டங்களின் பலத்தினால் அதிகாரத்திற்கு வந்த ஒரு சர்க்கார், இந்தக் காங்கிரஸ் சர்க்காரைப் போன்று இவ்வளவு துரிதமாக மக்களிடமிருந்து தனிமைப் படுத்தப்பட்டு, மக்களின் வெறுப்புக்குப் பாத்திரமானதைச் சரித்திரத்தில் இதுவரை கண்டதில்லை. மக்களுக்குக் கொடுத்த ஒவ்வொரு வாக்குறுதிக்கும் இந்த சர்க்கார் துரோகம் செய்ததுதான் இதற்குக் காரணம்.

வெகுஜன எதிர்ப்பு வளர்ந்துள்ளது என்பதை உணர்ந்து சர்க்கார் இந்த ஆண்டு கடைசியில், பொதுத்தேர்தல்களை நடத்தப் போவதாக அறிவித்திருக்கின்றனர். நான்கு ஆண்டு பயங்கர அடக்கு முறையானது எதிர்க்கட்சிகளைச் சீர்குலைத்துள்ளது.

பொதுமக்கள் இயக்கத்தைச் சீர்குலைத்து ஸ்தம்பிக்க வைத்துள்ளது என்று அவர்கள் நம்புகின்றனர். ஜனநாயக எதிர்க்கட்சிகள் இன்னும் ஒன்றுபடவில்லை என்று கருதுகின்றனர். எதிர்க்கட்சிகள் பிளவு பட்டுத் தேர்தலில் கலந்துகொள்ளும் நிலைமை இருந்தால், இந்தத் தேர்தலில் தாங்கள் வெற்றி பெற்றுவிடலாம் என்று எதிர்பார்க்கின்றனர். கடைசியாக தங்கள் கையில் உள்ள அரசாங்க இயந்திரத்தைக்கொண்டு, எதிர்க்கட்சிகளுக்கு ஜனநாயக உரிமைகளை மறுத்துவிடலாம என்று நம்புகின்றனர்

இந்த நிலைமையில், ஜனநாயகக் கட்சிகளும் கோஷ்டிகளும், நபர்களும் ஒன்றுபடுவது அவசியம்; மக்களின் நன்மைகளுக்கு உகந்த ஒரு பொதுவான திட்டத்தின் அடிப்படையில் அவர்கள் ஒன்றுபட்டு, இந்தத் தேர்தலில் காங்கிரசை எதிர்ப்பது அவசியம்; ஏகாதிபத்தியத்துடன் இணைந்து நிற்கும் இந்த நிலச்சுவான்தார்-ஏகபோக முதலாளிகளின் சர்க்காரை அகற்றி, மக்கள் ஜனநாயக சர்க்காரை ஸ்தாபிக்கும் வல்லமை வாய்ந்த பலம் பொருந்தியதொரு பரந்த மக்களின் ஐக்கிய முன்னணியை இந்த சர்க்காருக்கு எதிராகக் கட்டி வளர்ப்பதற்கு இது முக்கியமானதும், உருப்படியானதுமான படியாகும் என்று இந்திய

4-ம் பக்கம் பார்க்க

மானும்-மழுவும் ஆடாது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காருக்குச் சொந்தமானவர் ஜஸ்டிஸ் கட்சிக்காரராகயிருப்பார், டிரைவருக்கு எங்களைப் பார்த்தாலே கோபம் அதிகரிக்கும்-அதை அவருடைய முகம்மட்டுமல்ல-காரில் ஏறுபோதும் மூடும் கதவுகாட்டும்-சத்தம் நன்றாக வெளிப்படுத்தும் ஆனால் இன்றைய நிலைமை என்ன? கார் டிரைவர் நம்முடைய கட்சி காருக்குச் சொந்தமானவர் காங்கிரஸ் கட்சி எவ்வளவு மாற்றம் பாருங்கள். இதுமட்டுமல்ல அன்று நான் காரில் இருப்பதைக் காணச் சகியா டிரைவர் இன்று எங்கேயாவது போகும் பாதையில் என்னைக் கண்டுவிட்டால், காரை உடனே நிறுத்தி 'எங்கே போகவேண்டும் ஏறுங்கள்கொண்டுபோய்விட்டுவிட்டுப்போகிறேன்' என்றுகூறுகிறான்-காரணம் தெரிகிறதா உங்களுக்கு? ஏழை எளியவாகளின் இல்லம் நமது கழகம்-டிரைவர் கழகத் தோழனாக மாறிவிட்டான். பத்தாண்டுகளுக்குப் பிறகு நாம் கண்ட மாற்றம் இது. நமது கழகம் ஏழைகள் ஸ்தாபனம். அவர்களை ஈடேற்றக்கூடிய முறையில் தொண்டாற்றி வரும் ஸ்தாபனம்.

ஏழை எளியவர்கள் மட்டுமல்ல-நாட்டிலுள்ள மாணவத் தோழர்கள் அனைவரும் திரண்டுவிட்டனர். திராவிடத்தை அடைய

ஆசிரியர்கள் அச்சங்கொண்டவரே தவிர-அன்பும் அக்கரையும் உள்ளவர்கள் நமது கொள்கையில்-திட்டத்தில். நம்மை ஆதரிக்காதவர்கள் யார் இருக்கிறார்கள்? வேண்டுமானால் போலீஸார் சேரவில்லை என்று கூறலாம். அவர்களை நாமேதான்-தொலைவில் நிறுத்திவைத்திருக்கிறோம். இப்பொழுது வேண்டாத காரணத்தால் காலம் வரும். போலீசார் மட்டுமல்ல இராணுவமும் நம்முடன் சேர-அந்த நாட்கள் தொலைவிலில்லை. இன்னும் ஐந்து ஆண்டுகள் பொருத்திருக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாளுக்கு நாள் நாம் வளர்கிறோம் அத்துடன் நமது பொறுப்பும் வளர்ந்துகொண்டே யிருக்கிறது. நீங்கள் கண்ணியம்மிக்கவாகளாகக் காட்சியளிக்க வேண்டும். மாநாடுகளில் மட்டுமல்ல கூட்டங்களிலும் நீங்கள் மிக மிக பொறுப்புள்ளவர்கள் என்பதை எதிரிகளும் கண்டு கலங்க வேண்டும். ஏனெனில் எதிர் காலத் திராவிடத்தைச் செப்பனிடப் போகும் சிங்கங்களாகிய நீங்கள் உங்கள் கண்ணியத்தை விட்டுவிடக் கூடாதென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கழக முன்னணி வீரர்கள் இரண்டு நாட்களாக ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டீர்கள். நாட்டிலே காணப்படும் கேடுகளை, ஆட்சியாளரின் கொடுமைகளை ஆதார பூர்வமாக எடுத்துக்காட்டினார்கள். அவர்கள் பேசிய பேச்சில் ஏசல் ஏதாவது உண்டா? பார்ப்பனத் துவேஷம் காட்டப்பட்டதா? மந்திரிமாகள் மனம் நோக ஒரு வார்த்தை கூறியிருப்பார்களா? என் தம்பிமார்கள் எடுத்துக் காட்டிய குற்றங்கள் குறைகள் ஆட்சியாளரோ, காங்கிரஸ்காரர்களோயில்லை என்று மறுக்க முடியுமா? நாட்டில் பாட்டாளி மக்கள் படும் வேதனை, ஏழை எளியவர்கள் வாழ்க்கையில் ஏற்படும்தொல்லைகள் மாற்றுக் கட்சியாரை ஜனநாயக முறைக்கு மாறாக நடத்தும் அநீதி ஆகியவற்றைத்தானே தெள்ளத் தெளிய விளக்கினார்கள். திராவிடம் தனித்து வாழ்ந்தால் மக்களுக்கு என்ன லாபம் என்பதை புள்ளி விவரங்களுடன் விளக்கிக் காட்டினார்கள்-இதைக் கேட்டபிறகாவது உனக்கு புத்திவர வேண்டாமா-பிரிவினையை எதிர்க்கும் மறத் தமிழருக்கு, கண்ணகிக்காக கண்ணீர் வடிக்கும் கபோதிகளுக்கு.

நாம் வாழ, நம் நாடு செழிக்க தனிநாடு வேண்டுமென்றுதானே கேட்கிறோம். நாம் முன் வெள்ளையனுக்கு அடிமை என்றார்கள் ஆனால் இன்று வடநாட்டு ஆட்சிக்கு அடிமையாகத்தான் இருந்து வருகிறோம். இதைஇல்லை என்று கூற தைரியமுண்டாகாமராஜருக்கு

திராவிடம் தனித்திருந்தால் பிற நாட்டார் படையெடுப்புக்கு ஆளாகும் என்று கூறுகிறார்கள் அறிவிலிகள். திராவிடம் என்றும் எப்பொழுதும் யாராலும் வெற்றிபெற்றது கிடையாது. நான் கூறவில்லை இதை வரலாறு கூறுகிறது.

தமிழ்நாட்டாரை வடநாட்டாரோ மற்ற வெளியாரோ எப்பொழுதும் வென்றதில்லை என்பது மட்டுமல்ல-தமிழ்நாட்டார் வடநாட்டின் மீது போர்தொடுத்து வெற்றிக்கொடியை இமயத்தில் நாட்டியிருப்பதாகக் கூறுகிறதே சரித்திரம். சேரன் செங்குட்டவன் ஆரிய மன்னரை வென்று அவர்கள் தலையில் கல் சுமக்கச் செய்ததாக வல்லவோ சான்றுகள் இன்னும் உள்ளன. வீரர் வழிவந்த பரம்பரை வீணர்களின் ஆட்சியில் அல்லற்படுவதா? வீரமும் விவேகமுமற்ற டில்லி ஆதிக்கத்திடமா நம் திராவிடம் அடிமைப்பட்டுச் சீரழிவது என்று கேட்கிறேன்

வடநாட்டுச் சரித்திரச் சான்று அப்படியொன்றும் பிரமாதமான வெற்றியைக் கண்டதாகத் தெரியவில்லையே. வந்தவனுக்கெல்லாம் வாய்பொத்தி கைகட்டி தானே நின்றதாகச் சரித்திரம் கூறுகிறது. இந்தியாவைப் பாரதமாதாவாகப் படம் போட்டுகாட்டப்பட்டதைப் பார்த்திருப்பீர்கள்—பாரதமாதாவின் முந்தானிதானே பர்மா பர்மா தனி நாடாக வேண்டுமென அம்மக்கள் கிளர்ச்சி செய்தனர். முடியாதெனக் காங்கிரஸ் கூச்சலிட்டது. முடிந்ததா பர்மாவைப் பிரிக்காமல் ஆட்சி நடத்த இவர்களால். பிரிக்கபபட்டது பாமியர் சுயேச்சை அடைந்தனர். பாரதமாதா முந்தானி துண்டிக்கப்பட்டு விட்டது—மாதா மறைந்துவிட்டாளா? அல்லது அதற்காக ஒரு சொட்டு கண்ணீராவது விட்டாளா? இல்லை. இலங்கை இந்தியாவோடு ஒட்டிக்கொண்டிருந்தது இலங்கையர் தனிநாடு வேண்டுமெனக் கிளர்ச்சி கூடச் செய்யவில்லையே இவர்களைப்போல தபாலாபீசையா கொளுத்தினர், தண்டவாளத்தையா பெயர்த்தனர், பொதுக்கூட்டங்களுக்கா தீயிட்டனர், இல்லையே கடடாயம் வேண்டும் தனிநாடு எங்களுக்கு என்று தானே சுதந்திரம் பெற்றது. பெற்ற பிறகாவது இலங்கை மற்ற நாட்டை உணவுக்காகவாவது நம்மைப் போன்று பிச்சையா கேட்கிறது. தனக்கு வேண்டிய சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடிந்ததே. பிரிவினையைக் கேலி செய்யும் இவர்களுக்கு இன்னும் வெட்கமென்பதில்லையே பாகிஸ்தான் பகற்கனவு-இந்தியாவைத் துண்டாடுவது பசுவை துண்டாடுவதாகுமென்று கூச்சலிட்டார்கள். கடைசியில் என்ன நடந்தது? வலிய இவர்களே கிழக்கும் மேற்குமாக அளவிட்டுப் பகிர்ந்து கொடுத்து விட்டனரே, அந்த பாகிஸ்தானிடம் இன்று டாலர் பதிப்புக்குத் ததிங்கணத்தோம் போடுவதும் சணலுக்கு காவடி எடுப்பதுமாக இருப்பதை நாம் பலிக்கிறோமே பிரிந்த நாடுகளால் வடநாட்டு முதலாளி வர்க்கத்திற்கு நஷ்டம் மேற்பட்டு யிருக்குமே யன்றி வேறு எந்த வகையில் பிரிந்த நாட்டுக்கோ, பிரித்துக் கொடுத்த நாட்டுக்கோ நஷ்ட மேற்பட்டு விடடது கூற முடியுமா-அரசியல் அரிச்சுவடி தெரியாத காமராஜரால் அல்லது நேரு சர்க்காரைத்தான் கேட்கிறேன் பிரிவினைபால் என்ன நஷ்ட மென்று.

நாம் கேட்கும் திராவிட நாடு-பாகிஸ்தானைவிட சிரமமானதல்ல-இயற்கையாக அமைந்துள்ள பகுதியைத்தான் நாம் திராவிடநாடு என்கிறோம்—திராவிட நாடு தனி நாடானாலும் அதைக் காப்பாற்றிக்கொள்ள மூன்று பக்கங்களிலும் கடலும் மற்றொரு பக்கம் மலைப்பிரதேசமும்மதில்களை போல் இயற்கையாக அமைந்திருக்கிறது இந்த நிலையில் கூறுகிறார் காமராஜர் திராவிடநாடு என்றால் புரியவில்லை என்று-பாவம் அவர் படித்தது ஆரம்பப்பள்ளிக்கூடம்-பிறகு காந்தியார் ஆரம்பித்த சத்தியாக்கிரகப் பள்ளி-இதைவிட அவருக்கு அதிகப் படிப்போ-ஆற்றலோ-அறிவோ கிடையாது திராவிடநாடு என்பது புரியாத இவரைக் கேட்பதாக ஏன் பறைசாற்றிக் கொள்ள வேண்டும்? இவரிடமா இருக்கிறது திராவிட நாடு இருந்தால் எப்பொழுதோ பிடுங்கிக் கொண்டிருப்போமே-காமராஜர்இருப்பது விருதுநகர்-ஆசைத்தம்பி இருப்பதும் விருதுநகர் தம்பி லேசானவரல்ல, காமராஜரிடமிருந்தால் அதை அடைய ஆசைத்தம்பி அன்றே முயற்சி செய்திருப்பார்.

நேரு முடியாது என்று சொன்னால் அர்த்தமிருக்கிறது-குமாரசாமி ராஜா சொன்னால்-ஏன் என்றாவது கேட்கலாம். காமராஜர் யார்? திராவிடநாட்டைக் கொடுக்கமுடியாது என்று கூற-மானாட மழுவாட மங்கைசிவகாமியாட என்றால் அர்த்தமுண்டு. மானாடாது மழுவாடாது-இந்த மங்கை ஏன் ஆடுகிறாள்

புரியாத ஒன்றை. கொடுக்கமுடியாதென்று கூறும் காமராஜரின் போக்கே விசித்திரமானது.

ஒரு குருடன் தெரிந்தவர் வீட்டுக்கு வந்தான். வந்தசமய[m] குழந்தை பால் குடிக்காமல் அ[ழ] ஆரம்பித்தது. ஏன் குழந்தை அ[ழு]கிறது என்று குருடன் கேட்டான் குழந்தை பால் குடிக்கமாட்டே[ன்] என்கிறது என்றான். பாலா அ[து] எப்படியிருக்குமென்று குருடன் கேட்டான். பால் வெள்ளையாக்கொக்கு நிறமாக இருக்குமென்[று] கையை வளைத்துக் காட்டினான் அதைத் தடவிப் பார்த்தக் குருடன் "அய்யோ பாவம் இவ்வளவு பெரிய வஸ்து எப்படி குழந்தையின் தொண்டையில் போகும் அப்படிப் போனாலும் குழந்தை பிழைக்குமா"? என்று அலறினவன் கதைப் போலிருக்கிறது காமராஜர் கூற்று.

நம்முடைய போராட்டமெல்லாம் வடநாட்டு ஆதிக்கத்தினிடமே தவிர காமராஜரிடமல்ல, மந்திரிகளிடமல்லவே. திராவிட நாட்டுப் பிரச்சினை நமக்கும் வடநாட்டு ஆதிக்கத்திற்கும் உள்ள போராட்டம். இந்தப் போராட்டத்தில் நாம் வெற்றிபெறுவது நிச்சயம். அதற்காக உங்களைத் தயார் செய்துகொள்ளுங்கள் நமக்குள் கட்டுப்பாடும் உணர்ச்சியும் இருக்க வேண்டுமென்று நான் மறுபடியும் கூறுகிறேன். மாநாட்டுத் தலைவர் ஜான் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் நமக்கு தேர்தல்-பட்டம் பதவி முக்கியமல்ல. நமது குறிக்கோள் வேறு—மக்களிடையே அரசியல் விழிப்பையும்-அறிவு வளர்ச்சியையும் உண்டாக்கி அதன் மூலம் நல்லாட்சியை நாட்டில் நிலைநாட்டுவோம்-ஏழை என்றும் எளியவனென்றும் இந்நாட்டில் இருப்பதை இனிச் சகியோம்-அதற்காகப் பணியாற்றதாய்மார்களே, மாணவர்களே, தொழிலாளர்களே, திராவிட இளங்காளைகளே-திரண்டு வருவாங்கள்-வந்து உங்கள் பங்கை திராவிடநாட்டுப் பிரிவினைக்காகத் தாருங்கள்-நந்நாடு செழிக்க-மக்கள் மகிழ பாடுபடுங்கள் என்று கேட்டுக்கொண்டு என்னுரையை முடித்துக்கொள்ளுகிறேன்-வணக்கம்-நன்றி.

....

இராமநாதபுரம் ஜில்லா கைத்தறு நெசவாளர் மாநாடு

ஷை மாநாடு ஸ்ரீவில்லிபுத்தூரில் 27 5-51ல் நடைபெறும். மாநாட்டுத் தலைவர் சேலம் நெசவாளர் தலைவர் தோழர் ஏ. சித்தையன் அவர்கள்; திறப்பாளர் முன்னாள், முதலமைச்சர் தோழர் ஓமந்தூர்; பி. இராசாமி ரெட்டியார் அவர்கள் மற்றும் தோழர்கள்; எம். கன்னியப்பன், எம். எல். ஏ. வி சங்கரன் செட்டியார், கே.கே பூர்ணையா சி, என். அண்ணாத்துரை, எம். ஏ, காஞ்சிமணிமொழியார், கே, எஸ். பார்த்தசாரதி, பத்மாவதி ஜீவானந்தம் முகவை இராசமாணிக்கம், சி, எம். இராமச்சந்திரன் செட்டியார் பி.ஏ.பி எல்., முதலியவர்கள் கலந்துகொள்கிறார்கள்.

தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் எழுதிய "ஆறுமாத நூல் பஞ்சம்" என்ற நாடகம் திருநகரம் இளைஞர் நாடக மன்றத்தாரால தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் தலைமையில் நடைபெறும்.

...டு கண்டிராத...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

...யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு ஆர் ...னசிங் கமிட்டி கூறுகிறது.

...நூற்றுக்கணக்கான கம்யூனிஸ்டு ...ட்சி அங்கத்தினர்களும், அனுதாபி ...ளும் தடுப்புக்காவல் சட்டத்தின் ...ழோ அல்லது, பல வழக்குகளில் ...பந்தப்படுத்தியோ, சிறைகளில் ...டைக்கப்பட்டுக் கிடக்கின்றனர். ...தொழிற் சங்க இயக்கம், கிசான் இயக் ...ம் முதலிய ஜனநாயக இயக்கங்களின் ...லைவர்களும் ஊழியர்களுமாவர் இத் ...தாழர்கள், இன்னும் பல தோழர் ...ள் மீது வாரண்டுகள் இருந்து வரு ...தனால், அவர்கள் தலைமறைவாக ...ருக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ...ிராவிடக் கழகத்தைச் சேர்ந்த நூற் ...க் கணக்கான ஊழியர்களும், சோஷ ...லிஸ்டு ஊழியர்களும் சிறையில் அடைக் ...கப்பட்டுள்ளனர்.

பல இடங்களில், பொதுக் கூட்டங் ...களுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும் ...டை விதிக்கப்பட்டிருக்கிறது. இன் ...னும் பல இடங்களில் போலீஸ் அதி ...காரியின் அனுமதி பெற்றுத்தான் ...கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்ற ...பலவிதமான நிர்ப்பந்தங்கள் இருந்து ...வருகின்றன.

இந்தப் போர்வீரர்களையும், பொது ...ஜன அபிப்பிராயதை உருவாக்கக் ...கூடிய தோழர்களையும் சிறையில ...அடைத்துவிட்டு, பேச்சு சுதந்திரமும், ...கூட்டம்கூடும் சுதந்திரமும், இவ்வாறு ...நெறிக்கப்பட்டு வரும்போது, தேர்தல் ...கள் சுதந்திரமாகவும், நேர்மையாக ...வும் நடக்கும என்று சர்க்கார் கூறி ...வருவது வெறும் கேலிக்கூத்து; அண் ...டப் புளுகு.

சிறையிலுள்ள எல்லா அரசியல் ...கைதிகளையும் விடுதலை செய்யவேண் ...டும்; வழக்குகள் வாபஸ் பெறப்பட ...வேண்டும்; வாரண்டுகள ரத்துசெய்யப் ...படவேண்டும் என்று கிளர்ச்சி செய்து சர்க்காரை நிர்ப்பந்திக்க வேண்டு மென்று எல்லா ஜனநாயகக் கட்சிகளை யும், கோஷ்டிகளையும், நபர்களையும், தொழிற்சங்கங்களையும் மற்றுமுள்ள பொது மக்கள் ஸ்தாபனங்களையும் மாகாண ஆர்கனைசிங் கமிட்டி வேண்டு கிறது. கூட்டங்கள், ஊர்வலங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் உடனே ரத்து செய்யப்பட வேண்டும் என்று கோரவேண்டும்.

பிரஜா உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் நிலைநாட்டுவது ஜன நாயக விரோதியான—மக்களால் வெறுக்கப்பட்டுள்ள—காங்கிரஸ் சர்க் காரை அகற்றி மக்களுக்கு நன்மை செய்யும், மக்கள் சர்க்காரை ஸ்தாபிப் பதற்காக மக்களைத் திரட்டி போராடு வதற்காக அத்தியாவசியமான பணி யாகும்.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

19—5—51

பாலையூர்

கே. ஏ. மதியழகன்

21—5—51

மஞ்சகுப்பம்

அண்ணாத்துரை, கே. ஏ. மதியழ கன்.

சே. மா. தி. மு. கழக சொற்பயிற்சி வகுப்பு

9-2-51 முதல் 27—4—51 வரை, 21 வகுப்புகள் முறையே, தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், என். வி. நடராசன், கா. அப்பாத்துரை எம். ஏ. எல். டி., மா. இளஞ்செழியன் பி. ஏ. (ஹானர்ஸ்), பி. வி. முத்துசாமி ஆகி யோர் முன்னின்று நடத்தினர்கள்.

டை வகுப்பில் பயின்ற மாணவர் களுள் கீழ்க்கண்டவர்கள் சமூக சீர் திருத்தத் திருமணங்களில் சொற் பொழிவாற்றத் தகுதியுடையவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1. தானி யல், 60 திருவொற்றியூர் ஹைரோடு, வண்ணாரப்பேட்டை, சென்னை. 2. கடலூர் புரட்சிதாசன், 7 கனல்தெரு, சி. பி. ரோடு, பேசின் பிரிட்ஜ், சென்னை. 3. பே. அ. சுப்பிரமணி யன், 8 அப்பாசாமி முதலித் தெரு, சென்னை 1; 4 மு. வேலாயுதம், 52 நல்லண்ண முதலித்தெரு, ராயப் பேட்டை, சென்னை. 5 ஜே. எம். சிங்கராயன், 43 மண்ணடி, சென்னை; 6. நாஞ்சில் ஜேவியர் 43 மண்ணடி, சென்னை; 7 என். வி. கலைமணி, C/o திராவிடன். 18 பெருமாள் முத லித்தெரு, சென்னை; 8 ஆர். டி. அரசு, 21 தேவராச முதலிசதெரு, பெரம்பூர் ப்ாரக்ஸ், சென்னை; 9 கோ. துரைராசன், 18 பெருமாள் நாய்க்கன் தெரு, புரசை சென்னை-7; 10 ச. கலைச்செல்வன் 3/50 செஞ்சேவியர் தெரு, எழுகிணறு சென்னை; 11 மு. மா. முத்து, 4 திருநீலகண்டநாய ஞர் தெரு. கொண்டித்தோப்பு சென்னை; 12 த. செயராமன், 120 வேளாளர் தெரு, புரசை சென்னை 7; 13 டி. எம். பாலசுந்தரம், 79 கந்த சாமி கோவில் தெரு, சென்னை 12; 14 க. சந்திரசேகரன், குளத்தெரு, சென்னை 1; 15 ஆர். ராசகோபால் 48 கந்தசாமி கோவில்தெரு, குயப் பேட்டை, சென்னை 12; 16 சம்பத் குமார், 21 பிரிக்லின்ரோட், ஓட்டேரி சென்னை 12; 17 கே. ராஜபுத்திரன் B. A. (Hons) 68 எழுகிணறு தெரு, சென்னை; 18 சா குப்புசாமி 6 முதல் நாராயணன் தெரு, தங்கசாலை சென்னை; 19 சி. வி சம்பத், 20 செ. திரவியம், 17 ஆண்டியப்ப முத லித்தெரு, வண்ணாரப்பேட்டை, சென்னை.

மாணவர் இலக்கிய மன்றம்

திருவல்லிக்கேணி, சென்னை

இம்மன்றத்தின் எதிர்கால நலன் பொருட்டுத் தேர்தல் நடைபெற் றது. தலைவர்: தோழர் ஆ. எ. கணபதி பி ஏ. எல் டி. உத வித் தலைவர்: கோலமுத்து செயலாளர் சுவாமிநாதன், துணைச்செயலாளர் மு. ராஜி, மு. கிருட்டின மூர்த்தி. செயற்குழு வினர்: ப. துரைராசன், ரா. பார்த்த சாரதி, ஜி முனுசாமி க. சண்மு கம் சி. சாரதா இவர்கள் ஏனைய அங்கத்தினர்களின் மன ஒன்று தலின் பின்னரே தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

அஸ்ஸாம் கரீம்கஞ்சில் மீண்டும் கடும்புயல் வீசியதால் பல மரங்கள் விழுந்தன. பயிர்கள் சேதமாயின. சர்க் கார் ஆஸ்பத்திரிக் கட்டிடம் சேத மடைந்தது. 250 குடிசைகள் நாசமா யின. 50 பேர் காயமடைந்தனர்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45 Muthumari Chetty Street, Madras-1.

சமூக சீர்திருத்த மாநாடு

திண்டிவனம்

காவேரிப்பாக்கம், நாகம்மையார்பந்தலில்

வேலாயுதம் அரங்கில்

20-5-51 ஞாயிறு அன்று

தலைவர்:

நாரண துரைக்கண்ணன்

துவக்குபவர்:

கே. ஆர். இராமசாமி

தி. மு. கழக பொதுச் செயலாளர்

அறிஞர் சி. என். அண்ணாதுரை

கலந்துகொள்வார்

மாநாட்டுச் சொற்பொழிவுகள்

சாக்ரடீஸ் அன்பழகன், கமால்பாட்சா ஈ. வே. கி. சம்பத், சன்யாட்சன் N. V. நடராசன், மார்ட்டின்லூதர் சி. பி. சிற்றரசு, ஆபிரகாம்லிங்கன் இரா. நெடுஞ்செழியன், வாலடேர் காஞ்சி கலியாணசுந்திரம், ராஜாராம்மோகன கே. ஏ. மதியழகன், வேமன்ன என். எஸ். இளங்கோ, ரூசோ மா. இளஞ்செழியன், நாராயணகுரு மனோகரன்.

உலகைத் திருத்திய உத்தமர்கள் குறித்துப் பேசுவர் மாநாட்டில்

இரெ. இளம்வழுதி, எஸ். எஸ். இராமசாமி, பூ. கணேசன், இராமாமிர்தம் அம்மையார், சத்தியவாணிமுத்து, ப உ. சண்முகம், திருக்குறள் முனுசாமி, கா. அப்பாதுரை, என். ஜீவரத்தினம, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. கே. வேலன், தில்லை. வில்லாளன், சி. வி. எம். அண்ணாமலை ஆகியோர் கலந்துகொள்வர்.

கே. ஆர். செல்லமுத்து—சீர்திருத்தப் பாடல்கள் பாடுவார்

...ர...: சி. என். ஏ., கே. ஆர். ராமசாமி

பங்குகொள்ளும்

சந்திரமோகன்

கட்டணம்: நன்கொடையாளர் ரூ. 10, வரவேற்பாளர் ரூ. 5, பிரதிநிதி ரூ. 2, பார்வையாளர் ரூ. 1, பெண்கள் அணா 8.

ஆ. தங்கவேலு, வரவேற்புக்குழுத்தலைவர்

என். எம். கோபால், எஸ். பூபாலன். செயலாளர்கள்

எஸ். நடராசன், கே. துளசிங்கம் தொண்டர்படைத் தலைவர்கள்

எம். முத்துசாமி, எஸ். . ராசு விளம்பர உறுப்பினர்கள்

—திண்டிவனம். தி. மு. க.

படிப்பில்லாதவர்களும் பொதுத் தேர்தலில் போட்டியிடலாம்

புதுடில்லி, மே 15—

இந்தியா பொதுத் தேர்தலில் எழுதப் படிக்கத் தெரியாதவர் களும் போட்டியிடலாம் என்று டில்லி சட்டசபை முடிவுசெய்தது கல்வியறிவு, அனுபவம் போன்ற தகுதிகள் உள்ளவர்களேதேர்தலில போட்டியிட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட வேண்டும் என்ற திருத்தம் நிராகரிக்கப்பட் டது. இது பற்றி டாக்டர் அம் பேத்கார் பேசுகையில், ‘கல்வியறிவு மட்டும் போதாது; ஒழுக்க சீலர் களே சட்டசபைஉறுப்பினர்களாக வேண்டும் என்று கூறினர்.

வர்த்தக லைசென்ஸ் பர்மிட்கள் முதலியவற்றையுடையவர்களும் தேர்தலில் போட்டியிடலாம்என்று காங்கிரஸ் பார்லிமெண்டரி சப் கமிட்டி முடிவு செய்திருக்கிறது. இத்தகையவர்களை தேர்தலுக்குத் தகுதியில்லாதவர்களாக்கும் வேலை யைப் புதிய பார்லிமெண்டுக்கு ஒதுக்குவதெனத் தீர்மானிக்கப்பட் டது. அரசாங்கக் காண்ட்ராக்டர் கள் மட்டும் தேர்தலில் போட்டி யிடக்கூடாது என்று இந்த சப் கமிட்டி முடிவு செய்துளது.